## யாழ் வலயக்கல்வி அலுவலகம்

**தரம் - 8 தவணை- 1 அலகுப்பரீட்சை – 01 நேரம் - 40 நிமிடம்**

### பகுதி – 1

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக**

1) நுண்ணங்கியை முதன்முதலில் அவதானித்த விஞ்ஞானி
   1) அன்டன்வொன் லீவன்குக் 3) கரோலஸ்லீனியஸ்
   2) கலிலியோ கலிலி 4) றொபெட் குக்

2) நுண்ணங்கிகளின் செயற்பாட்டால் அழுகலடையும் உணவு வகை
   1) பாண் 2) முட்டை 3) பட்டர் 4) உருளைக்கிழங்கு

3) நுண்ணங்கிகளின் வளர்ச்சிக்கு உவப்பான வெப்பநிலை
   1) $0^oC - 10^OC$ 2) $100^oC - 150^OC$ 3) $25^oC - 30^OC$ 4) $50^oC - 80^OC$

4) புரத குறைநிரப்பு உணவாக பயன்படும் நுண்ணங்கி எது?
   1) பற்றீரியா 2) பரமேசியம்
   3) அமீபா 4) அகாரிகஸின் இனப்பெருக்க அமைப்பான காளான்

5) இரண்டு நாட்கள் வெளியில் திறந்து வைக்கப்பட்ட இளநீரின் நொதித்தலுக்கு காரணமான நுண்ணங்கி
   1) மதுவம் 2) கிளமிடோமோனஸ் 3) பரமேசியம் 4) அல்கா

(5x4 = 20புள்ளி)

**சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் குறிப்பிடுக.**

1) பால்மா உற்பத்தியில் நுண்ணங்கி பயன்படுகிறது ( )
2) நுண்ணங்கிகளின் செயற்பாடு குளிர்சாதனப்பெட்டியில் வைக்கப்பட்ட உணவில் கட்டுப்படுத்தப்படுகிறது ( )
3) மலேரியா நோய் பற்றீரியாவினால் ஏற்படுகின்றது ( )
4) வெந்நீர் ஊற்றுகளில் நுண்ணங்கி காணப்படாது ( )
5) நுண்ணங்கியின் தொழிற்பாட்டின் போது உணவின் பண்புகள் மாற்றமடையும் ( )



(5x4 = 20புள்ளி)

கல்வி Education අධ්‍යාපන

### பகுதி II

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக**

**1) படங்களை அவதானித்து கீழே தரப்பட்ட வினாக்களுக்கு விடை தருக.**




| A | B | C | D | E |
|---|---|---|---|---|

a. நுண்ணங்கிகளை இனங்கண்டு பெயரிடுக.

A............................................. B............................................. C..............................................

D............................................. E............................................. (5x2= 10 புள்ளி)

b. வைக்கோல் ஊறவைத்த நீரில் காணப்படும் நுண்ணங்கி எது?.................................. (3புள்ளி)

c. தனிக்கல பூஞ்சணவகை எது?.................................................. (3புள்ளி)



kalvi.lk

d. பாண்துண்டொன்றை சிறிதளவு நீரில் நனைத்து மூன்று நாட்களின் பின் கைவில்லையால் அவதானிக்கையில் மேலே குறிப்பிட்ட எந்நுண்ணங்கி தென்படும்?..................................................
(3புள்ளி)

e. வெற்றுக்கண்ணுக்குத் தென்படாத இவ்வங்கிகளை எவ்வுபகரணம் மூலம் தெளிவாக அவதானிக்கலாம்? ………………………………………………………….. (2புள்ளி)

f. C , E ஆகிய நுண்ணங்கிகளின் இடப்பெயர்ச்சி அங்கங்களைத் தருக.
C…………………………………. E……………………………………….. (3புள்ளி)

g. இங்கு காணப்படாத உயிருள்ள உயிரற்ற இயல்புகளைக் காட்டக்கூடிய நுண்ணங்கி எது?
.............................................................................................................................. (3புள்ளி)

h. இதில் ஒளித்தொகுப்புச் செய்யக்கூடிய நுண்ணங்கி எது?......................................... (3புள்ளி)

**(30 புள்ளி)**

**2)** (A) உணவுப்பதார்த்தங்களின் மீது நுண்ணங்கித் தொழிற்பாடு பற்றிய பரிசோதனை தரப்பட்டுள்ளது.



a. மேலே குறிப்பிட்ட பரிசோதனையில் எந்நுண்ணங்கி பயன்படுகிறது?
...................................................................................................................... (3புள்ளி)

b. இப்பரிசோதனையின் போது உமது அவதானங்கள் 2 தருக
…………………………………………………………………………………………….
……………………………………………………………………………….. (3புள்ளி)

c. இங்கு பலூனை விரியச் செய்யும் வாயு எது?..........................................................(3புள்ளி)

d. இப்பரிசோதனையினை அடிப்படையாகக் கொண்ட உணவுற்பத்தி முறை ஒன்று தருக.
……………………………………………………………………………….(3புள்ளி)

e. இப்பரிசோதனையில் பலூனை மெதுவாகத் தளர்த்தும் போது உணரக்கூடிய மணத்திற்கு காரணமான வாயு எது? …………………………………………………… (3புள்ளி)

f. பின்வரும் உணவு வகைகள் நுண்ணங்கிகளின் தொழிற்பாட்டால் பாதிப்படைதல் எவ்வாறு அழைக்கப்படும்.
   i. வெல்ல உணவு ………………………….
   ii. இலிப்பிட்டு உணவு ……………………… (3புள்ளி)

(B) நுண்ணங்கிகளினால் மனிதனுக்கு பல நன்மையும் சில சந்தர்ப்பங்களில் தீமையும் ஏற்படுகின்றன.

(a) மருத்துவத் துறையில் நுண்ணங்கிகளின் பயன்பாடு 1 தருக
……………………………………………………………………………. (3புள்ளி)

(b) மனிதத்தோலில் ஏற்படும் தேமல் எந்நுண்ணங்கிக் கூட்டத்தினால் ஏற்படும்?.
.......................................................................................................................(3புள்ளி)

(c) தாவர விலங்குக் கழிவுகளைப் பிரிந்தழியச் செய்யும் நுண்ணங்கிக் கூட்டங்கள் எவை?
.......................................................................................................................(3புள்ளி)

(d) கழிவு முகாமைத்துவத்தின் போது பின்வருவனவற்றிற்குப் பயன்படும் குப்பைத்தொட்டிகளின் நிறங்களைத் தருக.
   1. தாவரக்கழிவு…………………………………..
   2. கடதாசி……………………………………... (3புள்ளி)

**(30புள்ளி)**



kalvi.lk

kalvi.lk

# தரம் 6,7,8

# தமிழ்

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Zoom செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் தமிழ் பாட வகுப்புகள்.

- ✅ மாறாத நேர அட்டவணையுடனான வகுப்புகள்.
- ✅ மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்த தொடர்ச்சியான பரீட்சைகள்.
- ✅ பயிற்சி செயலட்டைகள் pdf வடிவில் வழங்கப்படும்.

**மாதக் கட்டணம்**

**850/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

**தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.**



கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினுாடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page